1995 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, சுமார் 1½ இலட்சம் பெண்களுக்கு மேலாகப் பயன்பெற்றிருக்கிறார்கள், வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியான குளத்தூரிலேகூட, இன்றைக்கு இந்த செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலின் வாயிலாக சுமார் 77 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், அந்தத் தொகுதியில் மட்டும் 440 நபர்கள் பயன்படுகிற வகையில், பெண்கள் பயன்படுகிற வகையில், 22 செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற மாவட்டத்திலே மட்டும், புதுக்கோட்டை மாவட்டத்தில், சுமார் 1,464 பெண்கள் பயன்படுகிற வகையிலே 78 மையங்களிலே பட்டை தீட்டும் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே, கடந்த மார்ச் வரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே மட்டும் 440 பேர் பயனடைந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு, அந்தத் தொழில் தொடங்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 440, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

440—

ஒசூரில் சமுதாயக் கூடம் கட்டுதல்

***38975**—திரு. கே. ஏ. மனோகரன் :*

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒசூர் நகரில் இசுலாமிய சமுதாயத்தினர் வசதிக்காக ஒரு சமுதாயக் கூடம் வக்ஃப் வாரியத்தின் மூலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய சமூகத்தினர், திருமணத்திற்காக, ஓசூரிலே உள்ள அரசு ஆரம்பப் பள்ளியிலேதான், திருமண நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பள்ளி நடக்கிறபோது பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தினால், மீண்டும் அதைப் பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் நகரில், பூரண மக்கான் நிர்வாகக் கமிட்டிக்கு, 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இடங்கள் இருக்கின்றன. எனவே, அந்த உரிய நிர்வாகக் கமிட்டி, வக்ஃப் வாரியத்தை அணுகுமேயானால், வாரியம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் நகரிலே உள்ள பள்ளிவாசலுக்குச் சம்பந்தப்பட்ட இடத்திலே, ஜமாத் குழுவினர் அதற்காகக் கட்டிடம் கட்டுவதற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்து, நிதிவசதி இல்லாத காரணத்தினால், அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, வக்ஃப் வாரியமும், அங்கே இருக்கக்கூடிய நிதிநிறுவனங்களின் மூலம் 'ஜாயின்ட் கொலாடரல்' கொடுத்து, அதற்குக் கடன்வசதி பெற்றுக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகக் கமிட்டிக்கு சுமார் ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் இருக்கின்றன. எனவே, அந்த நிர்வாகக் கமிட்டி, உரிய திட்டத்தோடு, வக்ஃப் வாரியத்தை அணுகுமேயானால், அந்த நிர்வாகக் கமிட்டிக்குத் தேவையான உதவியை வாரியம் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

426—

ஆண்டிமடம் தொகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்தல்

***39938—**திரு. ஆர். தங்கராஜ்:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, தளவாய் கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?